யா/யாழ் இந்துமகளிர் கல்லூரி

# தமிழ்மொழியும் இலக்கியமும்

முதலாந் தவணைப் பரீட்சை - 2020

தரம் :- 08 நேரம் :- 2.00மணித்தியாலம்

## பகுதி - I

❖ எல்லாவினாக்களுக்கும் விடைதருக

01. “தலைதப்பியதுதம்பிரான் புண்ணியம்” இங்குதலைஎன்பதன் ஒத்தசொல்
    1. சென்னி 2. கரம் 3. நுதல் 4. நாசி

02. அரிச்சந்திரன் வாய்மைதவறாதவன் இதில் வாய்மைஎன்பதன் ஒத்தசொல்
    1. பொய் 2. நேர்மை 3. உண்மை 4. கடமை

03. இந்தநாட்டுக்குவிடுதலைகிடைக்குமாஎன்றஐயப்பாடுஅவர் உள்ளத்தில் எழுந்தது. ஐயம் என்பதன் எதிர்ப்பதம்
    1. சந்தேகம் 2. தெளிவு 3. தோல்வி 4. மறதி

04. compassஎனும் சொல்லுக்கானதமிழ்க்கலைச் சொல் எது?
    1. ஒலிவாங்கி 2. தானியங்கி 3. நிறமாலை 4. திசையறிகருவி

05. முதல் எழுத்துக்களின் தொகை
    1. 216 2. 30 3. 18 4. 90

06. இடுகுறிப் பெயராகஅமைவது
    1. நாற்காலி 2. மண்வெட்டி 3. நிலம் 4. நாவலர்

07. கூண்டுக்கிளிஎனும் பாடத்தின் ஆசிரியர்
    1. அ.சஞானசம்ந்தன் 3. கு.அழகிரிசாமி
    2. க.வேந்தனார் 4. பாரதியார்

08. பின்வருவனவற்றுள் இரட்டைமொழியாகஅமைவது
    1. குடுகுடு 2. உயரஉயர 3. அணிஅணி 4. சுடச்சுட

09. மாணவருக்குஉரியதுஒழுக்கம் இங்கு“கு”என்னும் உருபுஉணர்த்திநிற்கும் பொருள்
    1. பகை 2. கொடை 3. உறவு 4. தகுதி

10. இடையன் என்பதன் எதிர்பாற் சொல்
    1. இடையிச்சி 2. இடைச்சி 3. இடையன் 4. விறலி



kalvi.lk

11. பின்வருவனவற்றுள் இருபாற் பொதுப்பெயர்
    1. பாடகன் 2. புத்திசாலி 3. பண்டிதை 4. இல்லாள்

12. வாழ்வதற்காகவாசினனும் கடிதம் யாரால் எழுதப்பட்டது
    1. ஜவகர்லால் நேரு 2. பிரியதர்சினி 3. டால்ஸ்டாய் 4. இந்திரா

13. ஸ்கொட்லாந்துபடைக்குதலைவராக இருந்தவர்
    1. யாங்சன் 2. இராபர்ட் புருஸ் 3. மில்டன் 4. எமிடெமிஸ்

14. குணப்பெயராகஅமைவது
    1. விளையாடல் 2. நிறம் 3. பொரியல் 4. கொழும்பு

15. நான்காம் வேற்றுமைஉறவுப்பொருளில் வந்துள்ளவாக்கியம்
    1. கந்தனுக்குமகன் குமரன் 3. அரசனுக்குஉரியஅணிமுடி
    2. இராமனுக்குநண்பன் குகன் 4. இரப்பவற்குபொன் கொடுத்தான்

16. குறிப்புவினையாகஅமைவது
    1. உண்டான் 2. கரியன் 3. கற்றான் 4. போனான்

17. செயலைஉணர்த்திநிற்கும் சொல்
    1. வினைச்சொல் 2. இடைச்சொல் 3. பெயர்ச்சொல் 4. உரிச்சொல்

18. நன்றிமறக்கக்கூடாதுஎன்பதைஉணர்த்தும் பழமொழி
    1. அகத்தின் அழகுமுகத்திலதெரியும்
    2. உப்பிட்டவரைஉள்ளளவும் நினை
    3. இளமையிற் கல்விசிலையில் எழுத்து
    4. எறும்புஊரக் கல்லும் தேயும்

19. கிரேக்கசிந்தனையாளர்
    1. காளிதாசன் 2. மில்டன் 3. பிளேட்டோ 4. சேக்ஸ்பியர்

20. கண்ணன் இளனிகுடித்தான். இளனிஎன்பதன் சரியானஎழுத்துமொழி
    1. இளனி 2. இளநீர் 3. இழநீர் 4. இளணீர்

(20 x 1 ½ = 30புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

## பகுதிII

**எல்லாவினாக்களுக்குவிடைதருக**

01. பின்வரும் தலைப்புக்களுள் ஒன்றினைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குகுறையாமல் கட்டுரைஎழுதுக
    1. நாட்டார் பாடல்
    2. விஞ்ஞானத்தின் விந்தை
    3. நான் பறவையானால்
    4. முயற்சிதிருவினையாக்கும்

(20புள்ளிகள்)

02. கணிதஒலிம்பியாட் பரீட்சையில் தேசியரீதியில்முதலிடத்தில் சித்தியடைந்தநண்பனைபாராட்டி 75 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் எழுதுக

(15புள்ளிகள்)

03. எல்லாவினாக்களுக்குசுருக்கமானவிடைஎழுதுக
    1. இரண்டுதம்பிகள் என்னும் பாடத்தின் மூலம் பெற்றபடிப்பினை இரண்டுதருக?
    2. கூண்டிற்கிளிஎனும் அலகில் கிளிக்குவிருப்பமானஉணவாககுறிப்பிடப்பட்டவையாவை?
    3. தசரதமன்னனின் நான்குபுதல்வர்கள் யாவர்?
    4. பறவைகள் பெற்றுள்ளஉயர்வான இசைவாக்கம் யாது?
    5. டால்ஸ்டாயின் பிரசித்திபெற்ற நூல் யாது?

(5x3 = 15புள்ளிகள்)

04. பின்வரும் பாடலைவாசித்துகீழுள்ளவினாக்களுக்குவிடைஎழுதுக

வானத்திலேபிறந்தமழையேவா - இந்த
வையத்தைவாழவைக்கமழையேவா
சீனிக்கரும்புதரமழையேவா–நல்ல
செந்நெல் செழிப்பாக்கமழையேவா–நல்ல

காடுசெழிக்கவைக்கமழையேவா
காடுசெழிக்கவைக்கமழையேவா



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

ஆளகிணறுகுளம் ஏரிஎல்லாம் - நீர்
அழகுபடுத்தநல்லமழையேவா.

(-பாரதிதாசன்-)

1. வையத்தைவாழவைக்ககவிஞர் எதைஅழைக்கின்றார்?
2. மழையினால் கிடைக்கும் பயன்கள் எவையெனக் கூறப்படுகின்றது?
3. இப்பாடலில் குறிப்பிடப்படும் நீர் நிலைகள் எவை?
4. பின்வரும் சொற்களுக்குஒத்தகருத்தைஎழுதுக
   1. வானம்
   2. அழகு
5. இச் செய்யுளைப் பாடியவர் யார்?

(5 x 3 = 15புள்ளிகள்)

05. பின்வரும் சொற்களைவைத்துபொருள் விளங்கவாக்கியம் எழுதுக

1. அலை
2. திரை
3. மனம்
4. மணம்
5. பொறுப்பு

(5 x 1 = 5புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
ZOOM APP மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**